
தினத்தளம்
PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
www.dhinathdhalam.com
ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 | இதழ் Issue : 136 | வியாழக்கிழமை Thursday | 13.08.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# தொகுதி மறுவரையறைக்கு எதிரான தீர்மானம்

## முதலமைச்சர் விஜய் முன்னிலையில் தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றம்



சென்னை: அதிமுக, பாஜக, பாமக ஆகிய கட்சிகளின் எதிர்ப்புக்கு மத்தியில் திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவுடன் முதல்வர் விஜய் கொண்டுவந்த தொகுதி மறுவரையறைக்கு எதிரான தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்ற ப்பட்டது. தமிழக சட்டப்பேரவையில் (ஆக.12) தொகுதி மறுவரையறைக்கு எதிராக முதல்வர் விஜய் தனித் தீர்மானத்தை கொண்டு வந்து உரையாற்றினார். இதைத்தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர்கள் காரசார விவாதம் நடத்தினார்கள்.

"தொகுதி மறுவரையறையில் எக்காரணம் கொண்டும் தமிழகம் பாதிக்கப்படக் கூடாது என்பதே திமுகவின் உறுதியான நிலைப்பாடு. திமுகவை பொறுத்தவரை பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீட்டை முழுமையாக ஆதரிக்கிறோம்" என சட்டப்பேரவை எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

பின்னர், "நாடாளுமன்றத்தில் தொகுதிமறுவரையறை மசோதா தாக்கல் செய்வதற்கான எந்த அறிகுறியும் இல்லாத நிலையில், அரசியல் காரணங்களுக்காக பரபரப்பை ஏற்படுத்தும் வகையில் தவெக அரசு அவசர அவசரமாக தனி தீர்மானத்தை கொண்டு வந்துள்ளது. தொகுதி மறுவரையறை தமிழகத்துக்கு சாதகமாக உள்ளதா? பாதகமாக உள்ளதா? எனத் தெரியாமல் அரசியல் காரணங்களுக்காக தமிழக அரசு கொண்டு வந்துள்ள தீர்மானத்தை அதிமுக எதிர்க்கிறது.

அரசியல் காரணங்களுக்காக தவெக அரசு இந்த தீர்மானத்தை கொண்டு வந்துள்ளது; அதிமுக இதை நிராகரிக்கிறது," என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து, "தொகுதி மறுவரையறை தொடர்பான மசோதாவுக்கு ஒன்றிய அரசு சட்ட முன்வடிவு கொண்டு வராத நிலையில், எதன் அடிப்படையில் தனித்தீர்மானம் சரியாக இருக்கும்," என தேதிமுக எம்எல்ஏ பிரேமலதா விஜயகாந்த் கேள்வி எழுப்பினார். "தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் உள்துறை அமைச்சர் அமித்ஷா ஏற்கெனவே தெளிவுபடுத்திவிட்டார். முதல்வர் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை திரும்ப பெற வேண்டும். தொகுதி மறுவரையறைக்கு எதிரான தனித்தீர்மானத்தை ஆதரிக்கவில்லை," என பாமக எம்எல்ஏ கணேஷ் குமார் எதிர்ப்பு தெரிவித்தார். "மாற்றம் வேண்டும் என்று மக்கள் கருதிய காரணத்தால்தான் நீங்கள் இப்போது ஆட்சியில் இருக்குறீர்கள். காலப்போக்கில் தேவையான, ஆக்கப்பூர்வமான மாற்றத்தை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசினர் தனித் தீர்மானத்தை எதிர்த்து, தொகுதி மறுவரையறையை கட்சிகள் ஏற்க வேண்டும்," என பாஜக எம்எல்ஏ போஜராஜன் தெரிவித்தார்.

"தொகுதி மறுவரையறையால் தமிழகத்தின் எம்.பிக்கள் எண்ணிக்கை குறையும். ஆனால் உத்தரப் பிரதேசம் போன்ற பெரிய வடமாநில எம்.பிக்களின் எண்ணிக்கை அதிகரித்து அவர்களே பிரதமர்களாகவும், கேபினட் அமைச்சர்களாகவும் வர வாய்ப்புஏற்படும். முதல்வர் கொண்டு வந்த தீர்மானம் தற்போது அவசியமானது. பிரதமர்மோடி, நாடாளுமன்றத்தில் ஒன்றும், வெளியும் வெவ்வேறாக பேசுகிறார். இந்த வரலாற்று சிறப்புமிக்க தீர்மானத்தை வரவேற்கிறோம்" என விசிக அமைச்சர் வன்னி அரசு தெரிவித்துள்ளார். பின்னர் சிபிஎம் எம்எல்ஏ செல்லசாமி பேசுகையில், "தொகுதி மறுவரையறைக்கு எதிரான தீர்மானத்தை மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மனதார ஆதரிக்கிறது. தற்போதைய தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றம் கூடாது. தொகுதி மறுவரையறைசம்மந்தமாக அனைத்து கட்சிகளுடனும், மாநிலங்களுடனும் பாஜக பேசிய பிறகுதான், முடிவெடுக்க வேண்டும். தமிழகத்தின் இடைநிலை தொகுதிகளை குறைப்பதுதான் பாஜவின் நோக்கம். மக்கள் தொகை கணக்கெடுப்புக்கும், மகளிர் இட ஒதுக்கீட்டுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை" என்றார்.பின்னர் சிபிஎம் எம்எல்ஏ செல்லசாமி பேசுகையில், "தொகுதி மறுவரையறைக்கு எதிரான தீர்மானத்தை மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மனதார ஆதரிக்கிறது. தற்போதைய தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றம்கூடாது.தொகுதி மறுவரையறைசம்மந்தமாக அனைத்து கட்சிகளுடனும், மாநிலங்களுடனும் பாஜக பேசிய பிறகுதான், முடிவெடுக்க வேண்டும். தமிழகத்தின் இடைநிலை தொகுதிகளை குறைப்பதுதான் பாஜவின் நோக்கம். மக்கள் தொகை கணக்கெடுப்புக்கும், மகளிர் இட ஒதுக்கீட்டுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை" என்றார். சிபிஎம் எம்எல்ஏ செல்லசாமி பேசுகையில், "தொகுதி மறுவரையறைக்கு எதிரான தீர்மானத்தை மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மனதார ஆதரிக்கிறது. தற்போதைய தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றம் கூடாது. தொகுதி மறுவரையறைசம்மந்தமாக அனைத்து கட்சிகளுடனும், மாநிலங்களுடனும் பாஜக பேசிய பிறகுதான், முடிவெடுக்க வேண்டும். தமிழகத்தின் இடைநிலை தொகுதிகளை குறைப்பதுதான் பாஜவின் நோக்கம். மக்கள் தொகை கணக்கெடுப்புக்கும், மகளிர் இட ஒதுக்கீட்டுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை" என்றார்.

அமைச்சர் ஷாஜகான் (ஐயூஎம்எல்) பேசும்போது, "பாஜகவின் தீர்மானங்கள் நாட்டு மக்களின் குரலுக்கு மதிப்பு அளிக்காமல், தங்களின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் உள்ளது.

மறுவரையறைக்கு எதிரான தீர்மானத்தை ஐயூஎம்எல் கட்சி ஆதரிக்கிறது" என்று கூறினார்.

ஜக,பாமக ஆகிய கட்சிகளின் எதிர்ப்புக்கு மத்தியில் திமுக, காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விசிக, ஐயூஎம்எல் உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவுடன் முதல்வரின் தனித் தீர்மானம் குரல் வாக்கெடுப்பு நிறைவே ற்றப்பட்டது. தேமுதிக தனது நிலைப்பாட்டை சரியாக சொல்லவில்லை.

# "தொகுதி மறுவரையறைக்கு எதிரான தீர்மானத்தை திமுக ஆதரிக்கிறது" எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு



சென்னை: "தொகுதி மறுவரையறையில் எக்காரணம் கொண்டும் தமிழகம் பாதிக்கப்படக் கூடாது என்பதே திமுகவின் உறுதியான நிலைப்பாடு. திமுகவை பொறுத்தவரை பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீட்டை முழுமையாக ஆதரிக்கிறோம்" என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் இன்று தொகுதி மறுவரையறைக்கு எதிராக முதல்வர் விஜய் தனித் தீர்மானத்தை கொண்டு வந்தார். இதையடுத்து, உதயநிதி ஸ்டாலின் பேசுகையில், "தொகுதி மறுவரையறை சட்டத்தை ஒன்றிய அரசு மீண்டும் கொண்டு வரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தச் சூழலில் தொகுதி மறுவரையறையில் எக்காரணம் கொண்டும் தமிழகம் பாதிக்கப்படக் கூடாது என்பதே திமுகவின் உறுதியான நிலைப்பாடு.

தொகுதி மறுவரையறையின் பாதிப்பை முதலில், இந்தியாவுக்கே கூறியவர் அன்றைய முதல்வர் ஸ்டாலின். தமிழகம் பாதிக்கக் கூடாது என திமுக ஆட்சியிலேயே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன் நிமித்தமாக 7 மாநில முதல்வர்களுக்குக் கடிதம் எழுதினார் ஸ்டாலின். ஏப்ரல் 16-ல் மசோதா எரிப்புப் போராட்டம் நடைபெற்றது. அப்போது மசோதா நகலை எரித்து, எங்கள் எதிர்ப்பைக் காட்டினோம்.

நாடாளுமன்றத்தில் மசோதா தோற்கடிக்கப்படக் காரணம் திமுகதான். தமிழக எம்.பிக்களின் எண்ணிக்கையை குறைக்க அனுமதிக்க மாட்டோம். ஆகவே தொகுதி மறுவரையறையை எதிர்த்து அரசு கொண்டுவந்த தனித்தீர்மானத்தை ஆதரிக்கிறோம்.

தொகுதி மறுவரையறையில் எக்காரணம் கொண்டும் தமிழகம் பாதிக்கப்படக் கூடாது என்பதே திமுகவின் உறுதியான நிலைப்பாடு.

33% மகளிர் இட ஒதுக்கீட்டை திமுக முழுமையாக வரவேற்கிறது ஆதரிக்கிறது. 1971 மக்கள் தொகை அடிப்படையிலேயே தொகுதி மறுவரையறை செய்யப்பட வேண்டும். அதே சமயம் மக்களவையில் தமிழக எம்.பி.க்கள் பிரதிநிதி த்துவம் 7.18 என்ற சதவித்தத்தை குறைக்க அனுமதிக்கக் கூடாது. அரசு கொண்டுவந்துள்ள தீர்மானத்தை திமுக ஆதரிக்கிறது" என்றார்.

இதனிடையே, இந்த தீர்மானத்துக்கு அதிமுக, பாமக, பாஜக எதிர்ப்பு தெரிவித்த நிலையில், திமுக, காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விசிக, ஐயூஎம்எல் உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவுடன் முதல்வரின் தனித் தீர்மானம் நிறைவேற்ற ப்பட்டது.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# தொடர்ந்து மீண்டும் உயரும் தங்கம் விலை



சென்னை: சமீபநாட்களாக தங்கம் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. (ஆக.12) காலை மீண்டும் உயர்ந்தது.

அதன்படி, சென்னையில் இன்று 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.400 உயர்ந்துள்ளது. வெள்ளி விலையில் மாற்றமில்லை.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், கச்சா எண்ணெய் விலை, அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை செயல்பாடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில் தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது. அமெரிக்கா - ஈரான் இடையிலான மோதலின் தாக்கம் உலகபொருளாதாரத்தில் எதிரொலித்து வருகிறது. அது சர்வதேச அளவில் தங்க விற்பனையில் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்தச் சூழலில் சென்னையில் இன்று காலை வர்த்தகம் தொடங்கியதும் 22 காரட் ஆபரணத் தங்கம் விலை கிராமுக்கு ரூ.50 உயர்ந்து, ஒருகிராம் ரூ.14,200-க்கும், பவுனுக்கு ரூ.400 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.1,13,600-க்கும் விற்பனையாகிறது.

24 காரட் ஆபரணத்தங்கம் கிராமுக்கு ரூ.54 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.15,491-க்கு விற்பனையாகிறது. 18 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.50 உயர்ந்து ஒரு கிராம் ரூ.11,980-க்கு விற்பனையாகிறது.

வெள்ளி விலையை பொறுத்தவரையில் இன்று சந்தையில் மாற்றமின்றி விற்பனை ஆகிறது. ஒரு கிராம் வெள்ளி ரூ.260-க்கும், கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ.2,60,000-க்கும் விற்பனையாகிறது.




ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், இச்சிப்பாளையம் கிராம நிர்வாக அலுவலகம் அருகில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகளை நேற்று (12.08.2026) கேட்டறிந்தார். உடன் ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் க.முத்துசாமி உட்பட பலர் உள்ளனர்.

# தேவேந்திர பேனாக்கள் இயக்க தலைவர் பாலசுந்தரம் துணை ஆட்சியர் மகள் பூப்புனித நீராட்டு விழாவில் பங்கேற்பு

தூத்துக்குடி நகரம்,முத்துநகர்,அம்மு பேலஸில் வைத்து 9-8-26ல் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் துணை ஆட்சியர் (முத்திரை)ஆக பணிபுரியும் திரு. வே.செல்வகுமார் அவர்களின் புதல்வி செல்வி செ.லத்திகாவின் பூப்புனித நீராட்டு விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

இவ்விழாவில் தேவேந்திர பேனாக்கள் இயக்க தலைவர்,வழக்கறிஞர் T.C.பாலசுந்தரம் சிறப்பு விருந்தினராக குடும்பத்தினருடன் கலந்து கொண்டு செல்வி லத்திகா வை வாழ்த்தி பரிசுகள் வழங்கி சிறப்பித்தார்.

மேலும் இவ்விழாவில் அரசு ஊழியர்கள்,அரசு அதிகாரிகள்,வியாபாரிகள், தேவேந்திர பேனாக்கள் நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.



# கடையநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாட்டு நலப்பணித் திட்டம், போதைப்பொருள் எதிர்ப்பு மன்றம் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் சார்பாக போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணி

கடையநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாட்டு நலப்பணித் திட்டம், போதைப்பொருள் எதிர்ப்பு மன்றம் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் சார்பாக போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணி 11.8.26 அன்று நடத்தப்பட்டது. பேரணியை காவல் உதவி ஆய்வாளர் இதயத்துல்லா தொடங்கி வைத்தார். கல்லூரி முதல்வர் திருமதி ரா. ஜெயா (மு. கூ. பொ ) அவர்கள் வழிகாட்டுதலின்படி முனைவர் ஆங்கிலத்துறை தலைவர் முனைவர் ராம்சங்கர் கலந்து கொண்டு முன்னிலை வகித்து பேசினார். தொடர்ந்து கடையநல்லூர் புதிய பேருந்துநிலையம்முதல் நகராட்சி அலுவலக மணிக்கூண்டு வரை பேரணி சென்று திரும்பியது. இந்த ஊர்வலத்தில் போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு கோஷங்கள் எழுப்பப்பட்டன. நிறைவாக உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது .இதில் மாவட்ட குழந்தைகள் நல குழு உறுப்பினர் திருமதி நசீமா மற்றும் கடையநல்லூர் தீயணைப்பு நிலைய அலுவலர் திருமதி நந்தினி ,உதவி அலுவலர் அப்துல்லா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் கடையநல்லூர் அரசு கலைமற்றும்அறிவியல் கல்லூரி மாணவ மாணவிகள் பேராசிரியர்கள் அரசு அலுவலர்கள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சிக்கான ஒருங்கிணைப்பை நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர் முனைவர் பால் மகேஷ் போதைப்பொருள் எதிர்ப்பு மன்ற ஒருங்கிணைப்பாளர் திரு ஆறுமுகம் இளையோர் செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் குரு பிரசாத் ஆகியோர் இணைந்து செய்திருந்தனர்.



# மத்திய அரசின் தொகுதி மறுவரையறை திருத்த மசோதாவைக் கண்டித்து, தூத்துக்குடி மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் கண்டன பேரணி




தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் மாணிக்கம் தாகூர் வழிகாட்டுதலின்படி, தூத்துக்குடி மாநகர் மாவட்டத் தலைவர் எஸ். எம். சகாயராஜ் தலைமையில் பேரணி நடைபெற்றது. மத்திய பா.ஜ.க. அரசு கொண்டுவந்துள்ள தொகுதி மறுவரையறை நடவடிக்கைகளுக்கு எதிராகப் பேரணியில் பங்கேற்ற காங்கிரஸ் கட்சியினர் கண்டன கோஷங்களை எழுப்பினர். இப்போராட்டத்தில் மண்டலத் தலைவர்கள் சேகர்,ஐசன் சில்வா,நிர்மல்கிறிஸ்டோபர்,மேற்கு மண்டலப் பொறுப்பாளர் ஜான் சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டேனியல் ராஜ், சுடலையாண்டி ஆகியோர் கலந்துகொண்டனர். மாவட்டத் துணைத் தலைவர்கள் மடத்துர் தனபால் ராஜ், பாலகிருஷ்ணன், அந்தோணி ஜெயராஜ், டேவிட் வசந்தகுமார்,பி.ஜே.சி.சுரேஷ், நாகேந்திரன், ராஜாராம், மாவட்டப் பொதுச்செயலாளர்கள் கோபால், மைக்கேல் பிரபாகர்,புல்டன் ஜெயின், ரஞ்சிதம் ஜெபராஜ், ஆண்ட்ரூ ஜாப்ரின் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் இக்னேசியஸ், காமாட்சி தனபாலன், கதிர்வேல் மாரியப்பன், ஜோனாதன், அசன் பாத், வழக்கறிஞர் சகாயராஜ் உட்பட்த் திரளான கட்சித் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



# கடையநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் "போதையில்லா இந்தியாவை உருவாக்குவதற்கான இளைஞர்கள் விழிப்புணர்வு


கடையநல்லூர்அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது-இது பற்றிய விவரமாவது

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாட்டு நலப் பணித்திட்டம்அணி எண் 7 சார்பாக "போதைப்பொருள் இல்லா இந்தியாவிற்கான இளைஞர்கள்" என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி இந்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அமைச்சகத்தின் மண்டல நாட்டு நலப் பணித்திட்ட இயக்ககம் சென்னை மற்றும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக நாட்டு நலப் பணித்திட்டம் ஆகியவற்றுடன் இணைந்து கல்லூரி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது இந்நிகழ்ச்சியின் நோக்கம் போதைப்பொருள் இல்லாத வளர்ச்சி அடைந்த இந்தியாவை 2047க்குள் உருவாக்குவதும் விக்ஷித் பாரத் 2047 என்ற இந்தியாவின் கனவை நனவாக்குவதில் மாணவர்களின் பங்கை ஊக்குவிப்பதுமாகும்.

தொடர்ந்து இளைஞர்களை சமூகத்தில் பொறுப்புணர்வுமிக்கவர்களாக இருக்க ஊக்குவிக்கும் இடத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்த விக்ஷித் குறும்படம் திரையிடப்பட்டது நிகழ்ச்சியை கல்லூரி முதல்வர் திருமதி. ரா. ஜெயா (மு .கூ. பொ) அவர்கள் தலைமை தாங்கி போதைப்பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்க நாட்டு நலப் பணித்திட்ட தன்னார்வலர்கள் பாடுபட வேண்டும்எனதலைமைஉரையாற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். ஆங்கிலத்துறை தலைவர் முனைவர் ம. ராம்சங்கர் வாழ்த்துரை வழங்கினார் முன்னதாக நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர் முனைவர். ஆ. பால் மகேஷ் கருத்தரங்கில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்று பேசினார். கருத்தரங்கத்திற்கு சிறப்பு விருந்தினராகமனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் A. வெளியப்பன் அவர்கள் விக்ஷித் பாரத் 2047 என்ற இந்தியாவின் இலக்கை எட்ட நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும் என வலியுறுத்தினார். மை பாரத் பதிவுகள் குறித்தும் விக்ஷித் பாரத் உறுதி மொழியையும் மாவட்ட இளைஞர் அலுவலகம் மை பாரத் கேந்திரா சார்பாக சிறப்பாக நடத்தி விளக்க உரையாற்றினர். இளையோர் பாராளுமன்றத்தில்பங்கு பெற்ற மாணவி செல்வி. வைஷாலி விக்ஷித் பாரத் 2047 இலக்கை அடைய இளைஞர்கள் பாடுபட வேண்டும் என்று வலியுறுத்தி பேசினார் நிகழ்ச்சியில் அனைத்து துறை தலைவர்கள் பேராசிரியர்கள் நாட்டு நலப்பணித் திட்ட மாணவ மாணவிகள் தன்னார்வலர்கள் என திரளாககலந்துகொண்டு விக்ஷித் பாரத் 2047 என்ற இந்தியாவின் கனவை நினைவாக்குவது குறித்தும் போதைப் பொருள் இல்லா இந்தியாவை உருவாக்குவது குறித்து விழிப்புணர்வு பயன் பெற்றனர். பங்கு பெற்ற மாணவமாணவிகளுக்கு இந்திய அரசின் பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்பட்டது இந்தநிகழ்வை தமிழ் துறை மாணவி ஜெயமாரி தொகுத்து வழங்கினார் நிகழ்ச்சியில் இறுதியாக தமிழ் துறைத்தலைவர் முனைவர் S. மாரியம்மாள் அனைவருக்கும் நன்றி கூறினார். இக்கருத்தரங்கத்திற்கான ஏற்பாடுகளை கணிதவியல் துறையை சேர்ந்த திரு ஆறுமுகம் மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட மாணவ மாணவிகளுடன் இணைந்து திட்ட அலுவலர் முனைவர் ஆ .பால்மகேஷ்நிகழ்ச்சிக்கு சிறப்பாகஏற்பாடு செய்து ஒருங்கிணைப்பும் செய்திருந்தார்.

ஈரோடு மாவட்டத்தில் 15 ந் தேதி

# அரசு மதுபானக் கடைகள் மூட வேண்டும் கலெக்டர் கந்தசாமி உத்தரவு



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு- ஈரோடு மாவட்டத்தில் வருகிற 15.08.2026 அன்று சுதந்திர தினத்தை முன்னிட்டு அரசு மதுபானக் கடைகள், அதனுடன் இயங்கும் மதுக்கூடங்கள் மற்றும் எப்.எல்.2/எப்.எல்.3 மதுபான விடுதிகள்/ஹோட்டல்களில் உள்ள பார்கள் ஆகியவை மேற்கண்ட தினத்தில் மூடப்பட வேண்டும் எனவும், அன்றைய தினத்தில் "மது விற்பனை இல்லாத நாளாக" (Dry Day) அனுசரிக்க வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளதைத் தொடர்ந்து 15.08.2026 அன்று முழுவதும் ஈரோடு மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு மதுபானக் கடைகள், அதனுடன் இயங்கும் மதுக்கூடங்கள் மற்றும் எப்.எல்.2/எப்.எல்.3 மதுபான உரிமதலங்கள் மூடப்பட்டிருக்கும் என்றும் அன்றைய தினத்தில் மதுபான விற்பனைகள் ஏதும் நடைபெறாது என்றும், அன்றைய தினம் மது விற்பனையில் ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது

# ஐந்து ஆயிரம் குடும்பங்களை வெளியேற்ற துடிக்கும் த.வெ.க. அரசு காயல் அப்பாஸ் கண்டனம்



ஐந்து ஆயிரம் குடும்பங்களை 21 நாளில் வெளியேற்ற துடிக்கும் த வெ க அரசுக்கு - மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் மாநில தலைவர் காயல் அப்பாஸ் கடும் கண்டனத்தை தெரிவித்துஉள்ளார்.இதுகுறித்துஅவர்வெளியிட்டுள்ள அறிக்கையில்கூறியிருப்பதாவது.திருப்பத்துர்மாவட்டம் ஆம்பூர் பாலாற்று கரையோர குடியிருப்புகளில் 5000 க்கும் மேற் பட்ட குடும்பங்கள் சுமார் நாற்பது ஐந்து ஆண்டுக்கும் மேலாக வசித்து வருகின்றனர். அப்படி இருக்கதிடீரெனநகராட்சியிலிருந்துவந்துஅனுமதியற்ற ஆக்கிரமிப்பு பொது நிலம் ஆகவே 21 நாளில் அப்பகுதி மக்களின் குடியிருப்புகளை காலி செய்ய வேண்டும் என ஒட்டிய நோட்டீஸால் அப்பகுதி மக்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தி உள்ளது . அப்பகுதியில் வசிக்கும் மக்களின் குடியிருப்புகளை காலி செய்வதற்கு முன் மாற்று இடங்கள் அல்லது வீடுகள் கொடுக்க பட்டிருக்கிறதா இல்லை ? மேலும். எந்தவித மாற்று ஏற்பாடு செய்யாமல் மக்களின் குடியிருப்பு களை காலி செய்ய வைப்பதனால் ஆயிரத்திற்க்கும் மேற் பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரம் கேள்வி குறியாக மாறி என்பதை த வெ க அரசு மிகவும் கருத்தில் கொள்ள வேண்டும். பொது மக்களின் நலனை கருதி அப்பகுதியில் வசிக்கும் மக்களின் குடியிருப்புகளை காலி செய்ய வைப்பதை த வெ க அரசு கை விட வேண்டும் என மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் சார்பில் வலியுறுத்தி கேட்டு கொள்கிறோம்.இவ்வாறுகாயல்அப்பாஸ்கூறியுள்ளார்.

ஆகஸ்ட் 15 சுதந்திர தினத்தை முன்னிட்டு சந்திரா ஹூண்டாய் ஷோரூம்களில்

# புதிய கார் வாங்குபவர்களுக்கு சிறப்பு தள்ளுபடி சந்திரா ஹூண்டாய் நிறுவன மேலாளர் அறிவிப்பு



வருகின்ற ஆகஸ்ட் 15ஆம் தேதி நமது பாரத நாட்டின் 80 வது சுதந்திர தினத்தை சிறப்பாக நாடு முழுவதும் கொண்டாடப்பட உள்ளோம், அது சமயம் கோவை அவிநாசி சாலை லட்சுமி மில் அருகில் உள்ள சந்திர ஹூண்டாய் ஷோரூம்ல் பத்திரிகையாளர்களை சந்தித்த பொது மேலாளர் மணிகண்ட வாசகன் கூறியதாவது,

அனைவருக்கும் சுதந்திர தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாகவும்,

இந்த அருமையான தருணத்தில் சந்திர ஹூண்டாய் அனைத்து ஷோரூம்களிலும் அதாவது,லட்சுமி மில்,சின்னியம்பாளையம், பொள்ளாச்சி, கோவைப்புதூர், மேட்டுப்பாளையம், நீலகிரி மாவட்டம் கூடலூர், கோத்தகிரி உள்ளிட்ட அனைத்து ஷோரூம்களிலும் ஹூண்டாய் கிரிட்டா, ஹூண்டாய் ஆரா,ஹூண்டாய் வென்யூ, ஹுண்டாய் ஐ20 நியாஸ், ஐ10,ஹூண்டாய் அல்கசார், ஹூண்டாய் எக்டர் உள்ளிட்ட அனைத்து கார்களுக்கும் சுதந்திர தினத்தை முன்னிட்டு வருகின்ற ஆகஸ்ட் 16ஆம்தேதிவரை,ஆகஸ்ட் 15ஆம் தேதி சுதந்திர தினம் அன்று அனைத்து ஷோரூமுக்கும் விடுமுறை என்பதால், அந்த சமயத்தில் போன் மூலம் கார்களை புக் செய்து கொள்ளலாம். வாடிக்கையாளர்கள் கார்களை புக் செய்தால் அவர்களுக்குதங்கநாணயம்மற்றும் ஒரு லட்சம் ரூபாய் வரை சலுகைகள் அளிப்பதாகவும், தெரிவித்தார், மேலும் சந்திர ஹூண்டாய் அனைத்து ஷோரூம்களிலும் சர்வீஸ் சென்டர்கள் இருப்பதால் மிகச் சிறப்பான முறையில் கார்களை ஒரிஜினல் உதிரி பாகங்களுடன் சர்வீஸ் செய்து தருவதாகவும் தெரிவித்தார். வாடிக்கையாளர்கள் இந்தவாய்ப்பை பயன்படுத்தி தங்களுக்கு பிடித்தமான ஹூண்டாய் கார்களை சிறப்புதள்ளுபடியுடன் வாங்கிச் செல்லலாம் எனவும்,ஹூண்டாய் நிறுவனத்தின் "சம்மந்" ஸ்கீம் மூலம் கிராமப்புற மக்கள் மற்றும் விவசாயிகளுக்கு சிறப்பு சலுகைகளும்,அதேபோல மருத்துவர்கள் ஆசிரியர்கள் மற்றும் கால் டாக்ஸி ஓட்டுனர்களுக்கும் பல்வேறு சலுகைகள் வழங்குவதாகவும் தெரிவித்தார். இந்த சலுகை ஆகஸ்ட் 12,13,14 மூன்று தினங்களுக்கு மட்டும் பொருந்தும் எனவும் தெரிவித்தார்,

# பாபநாசம் சொரிமுத்தையனார் கோவில் ஆடி அமாவாசை திருவிழா

மாமுனிவர் அகத்தியர் வழிபட்ட புனித பூமியில் குவியும்பக்தர்கள் -தாமிரபரணியில் புனித நீராடி நேர்த்திக்கடன் செலுத்தி வழிபாடு செய்து வருகின்றனர்.இது பற்றிய விவரமாவது

திருநெல்வேலி மாவட்டம் பாபநாசம் அருகே மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில், காரையார் அணைப்பகுதியை ஒட்டிய இயற்கை எழில் சூழ்ந்தபகுதியில் அமைந்துள்ளது பிரசித்தி பெற்ற சொரிமுத்தையனார் கோவில். தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்துள்ள இத்தலம் தென் தமிழகத்தின் முக்கியமான சாஸ்தா வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. குறிப்பாக ஆண்டுதோறும் நடைபெறும் ஆடி அமாவாசை திருவிழா பக்தர்களின் ஆன்மிக உணர்வோடு பாரம்பரியமும் கலந்த பெருவிழாவாக நடைபெறுவது சிறப்புக்குரியது. இக்கோவிலின் வரலாறுஅகத்திய முனிவருடன் தொடர்புடையது

சொரிமுத்தையனார் கோவில் வரலாறு அகத்திய முனிவரின் தவத்துடன் தொடர்புடையதாக ஐதீகம் கூறுகிறது.

இமயமலையில் சிவபெருமான் - பார்வதி திருக்கல்யாணம் நடைபெற்றபோது தேவர்கள், முனிவர்கள் என அனைவரும் வடதிசையில் திரண்டதால் வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்ததாகவும், உலகின் சமநிலையை நிலைநாட்ட சிவபெருமான் அகத்தியரை தென்திசைக்கு அனுப்பியதாகவும் புராண மரபு கூறுகிறது.

அதன்படி பொதிகை மலையை வந்தடைந்த அகத்தியர், தாமிரபரணி ஆற்றில் நீராடி, இப்பகுதியில் தவம் மேற்கொண்டதாகவும், அப்போது அவருக்கு தெய்வீக ஜோதி காட்சி கிடைத்ததாகவும் தலவரலாறு தெரிவிக்கிறது. அந்த ஜோதியில் சாஸ்தாவை தேவர்கள் பூமாரி பொழிந்து வழிபட்ட காட்சியை அகத்தியர் கண்டதாகவும், அதன் காரணமாகவே 'சொரிமுத்தையனார்' என்ற திருநாமம் ஏற்பட்டதாகவும் ஐதீகம் கூறுகிறது.



தாமிரபரணியில் புனித நீராடி வழிபாடு செய்து

ஆடி அமாவாசையை முன்னிட்டு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் குடும்பம் குடும்பமாக சொரிமுத்தையனார் கோவிலுக்கு வருகின்றனர்.அதிகாலையில்தாமிரபரணி ஆற்றில் புனித நீராடி, முன்னோர்களை நினைவு கூர்ந்து தர்ப்பணம் உள்ளிட்ட வழிபாடுகளை மேற்கொண்டு, பின்னர் கோவிலில் சுவாமி தரிசனம் செய்கின்றனர்.

மகாலிங்க சுவாமி, சொரிமுத்தையனார், சங்கிலி பூதத்தார் உள்ளிட்ட தெய்வங்களுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. பக்தர்கள் பொங்கல் வைத்து வழிபடுவதுடன், தங்களது வேண்டுதல்கள் நிறைவேறியதற்காக பல்வேறு நேர்த்திக்கடன்களையும் செலுத்துகின்றனர்.

ஆடி அமாவாசை திருவிழா என்பது ஒரு நாள் நடைபெறும் வழிபாட்டு நிகழ்வாக மட்டுமல்லாமல், முன்னோர் வழிபாடு, சாஸ்தா வழிபாடு, பாரம்பரிய நேர்த்திக்கடன், குடும்ப நம்பிக்கை, இயற்கை மற்றும் ஆன்மிகம் ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைக்கும் தென் தமிழகத்தின் தனிச்சிறப்பு மிக்க திருவிழாவாக ஆண்டுதோறும் பக்தர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

அகத்திய முனிவரின் தவம், தாமிரபரணியின் புனிதம், சாஸ்தா வழிபாட்டின் தொன்மை ஆகியவற்றை தன்னகத்தே கொண்ட சொரிமுத்தையனார் திருத்தலம், தலைமுறை தலைமுறையாக பக்தர்களின் நம்பிக்கையையும் ஆன்மிகப் பாரம்பரியத்தையும் தொடர்ந்து காத்து வருகிறது.

# பணகுடி அரசு மேல்நிலைப்பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கலந்தாய்வு கூட்டம் நடந்தது

நெல்லை மாவட்டம் பணகுடி அரசு மேல்நிலைப் பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது இதற்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் முருகன் தாங்கினார். பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் சங்கரலிங்கம் மற்றும் பள்ளி மேலாண்மை குழு துணை தலைவர் கென்னடி முன்னிலை வகித்தார்.இப்பள்ளியின் முதுகலை ஆசிரியர் திருமதி மேரி அனிற்றா வரவேற்புரை வழங்கினார் வரலாற்று துறை ஆசிரியர் சண்முகவேல் இக்கூட்டத்தின் சிறப்புகள் குறித்து விளக்கினார்.வட்டார அளவில் நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் எம் பள்ளி மாணவர்கள் அதிகமான பரிசுகளைவென்றுவந்ததை பாராட்டி அந்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கப்பட்டது அதற்கான ஏற்பாடுகளை உடற்கல்வி ஆசிரியர் த ஜெயக்குமார் செய்திருந்தார்கள். மகிழ் முற்றம் சார்பாக ஜூலை மாதம் வெற்றி பெற்ற பாலை அணிக்கு சுழல் கோப்பை அணியினுடைய ஒருங்கிணைப்பாளர் முதுகலை ஆசிரியர் .ம.மதன்குமார் பெற்றுக்கொள்ளபொறுப்பாளர் முதுகலை ஆசிரியை மேரி அனிற்றா வழங்கினார் திரளான பெற்றோர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் பள்ளியில் அன்றாடம் நடைபெறும் செயல்களையும் இனி என்னென்ன சிறப்பு செயல்களை செய்யப் போகிறோம்என்றநிகழ்வுகளையும் மாணவ செல்வங்களுக்கு 100% தேர்ச்சியும் அதிக மதிப்பெண்ணும்பெறவேண்டும் என்ற நோக்கத்தில் எடுக்கப்பட்டுள்ளநடவடிக்கை குறித்தும் தலைமைஆசிரியர்விரிவாகவிளக்கினார்.பள்ளி மேலாண்மை குழு துணை தலைவர் கென்னடி அவர்களின் வேண்டுகோளை ஏற்று பள்ளியில் தூய்மை பணியாளரை நியமிக்க பெற்றோர்கள் தன்விருப்பப்பங்களிப்புதொகை அளிக்க அனைத்து பெற்றோர்கள் சம்மதத்துடன் முடிவெடுக்கப்பட்டது. டிஎன்பிஎஸ்சி சிறப்பு வகுப்பு உருவாக்கப்பட்ட தினுடைய பதாகை பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது. முதுகலை ஆங்கில ஆசிரியை திருமதி.ஆக்னஸ் ரெத்தினம் நன்றியுரை வழங்கினார் இதில், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



# தவெக மாவட்ட செயலாளருக்கு தாராபுரம் வடக்கு நகரம் சார்பாக வாழ்த்து



திருப்பூர் மாவட்டம் தாராபுரம் சட்டமன்றத் தொகுதியில் தமிழக முதல்வர் தளபதி விஜய் அவர்களால் நியமனம் செய்யப்பட்ட திருமதி சத்தியபாமா அவர்களுக்கு நேற்று தாராபுரத்தில் சிறப்பான வரவேற்பு அளித்து தாராபுரம் தாலுகா அலுவலகத்தில்இருந்துஅண்ணா சாலை வரை தவெக தொண்டர்களால் சிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட்டு அண்ணா சாலையில் தமிழக வெற்றி கழக கொள்கை தலைவர்கள் திருவுருவப்படங்களுக்கு மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது அதன் பிறகு தாராபுரத்தில் கருணா கல்யாண மண்டபத்தில்தாராபுரம்வடக்கு நகரநிர்வாகிகள் நகர செயலாளர் கதிர் மதுரை இணைசெயலாளர் ரஜினிகுமார் நகர பொருளாளர் ஜாபர் சாதிக் நகர துணைச் செயலாளர்கள் இதயக்கனி ,மேகலா நகர செயற்குழு உறுப்பினர்கள் போராளி தினகரன் மாரிமுத்து கஸ்தூரி சதீஷ் மற்றும் வார்டு செயலாளர்கள் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தாராபுரம் தொகுதி மாவட்ட செயலாளர் திருமதி சத்தியபாமா அவர்களுக்கு மலர் மாலை அணிவித்து தங்களது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர் விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது



ஆடி அமாவாசையை முன்னிட்டு

# தூத்துக்குடி கடற்கரைகளில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் முன்னோர்களுக்குத் தர்ப்பணம் கொடுத்து சிறப்பு வழிபாடு நடத்தினர்

ஆடி அமாவாசை தினத்தன்று முன்னோர்களுக்குத் தர்ப்பணம் கொடுத்து வழிபட்டான், குடும்பத்தி ல் அமைதியும் வளமும் பெருகும் என்பது நம்பிக்கை. இதனையொட்டி, இன்று அதிகாலை முதலே தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள முக்கிய கடற்கரைப் பகுதிகளான திரேஸ்புரம்,ரோச் பூங்கா கடற்கரை மற்றும் புதிய துறைமுகக் கடற்கரைப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் குடும்ப சமேதராகக் கூடினர்.

கடலில் புனித நீராடிய பக்தர்கள், கடற்கரையில் அமர்ந்து புரோகிதர்கள் மூலமாகத் தங்கள் முன்னோர்களின் நினைவாகப் எள், தண்ணீர் தெளித்துத் தர்ப்பணம் கொடுத்தனர்.

தொடர்ந்து, முன்னோர்களின் ஆன்மா சாந்தியடையக் வேண்டிப் பிண்டம் கரைத்து சிறப்புப் பூஜைகள் செய்தனர்.

மேலும், கோவில்களிலும் ஆடி அமாவாசையை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்களும் ஆராதனைகளும் நடைபெற்றன. சுவாமி தரிசனம் செய்யக் கோவில்களில்பக்தர்களின்கூட்டம் அலைமோதியது. ஆடி அமாவாசை வழிபாட்டையொட்டி அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படாமல் தவிர்க்கவும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் காவல் துறை சார்பில் கடற்கரைப் பகுதிகளில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.



சென்னை மயிலாப்பூர் ரஷிகா ரஞ்சனி சபாவில் வைத்து நடைபெற்ற LINEIZEWORLDRECORD உலகசாதனையாளர்கள்விருது வழங்கும்விழாவில்நியூஇந்தியன் கவுன்சில் எஜுகேஷனல் யூனிவர்சிட்டியின் நிர்வாக இயக்குனர் சங்கரி புதிய செல்வம் அவர்களின் மகள் ஐந்து வயதுடைய லனியா அவர்கள் ஏடிஎம் பற்றிய வாசிப்பில் உலக சாதனையாளர் விருது பெற்றதில் மகிழ்கிறோம் லனியா அவர்களை ஸ்கூல் ஆப் யூரோ கிட்ஸ் திண்டிவனம் மற்றும் புதிய இந்திய கவுன்சில் கல்வி பல்கலைக்கழகம் சார்பாக வாழ்த்தி மகிழ்கிறோம். மேலும் குழந்தை லனியா அவர்கள் இதுபோன்று பல சாதனைகள் படைக்க அப்பகுதி பொதுமக்கள் பலர் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

தூத்துக்குடியில் குடிநீர் தட்டுப்பாடு:

# அமைச்சர் ஸ்ரீநாத் எங்கே? அமைச்சர் மவுனம் காப்பது ஏன்? பா.ஜ.க. A.M.ராஜேஷ் கேள்வி



தூத்துக்குடி மாநகராட்சியில் குடிநீர் தட்டுப்பாடு நாளுக்கு நாள் தீவிரமடைந்து, பொதுமக்கள் குடிநீருக்காக கடும் அவதிக்குள்ளாகி வரும் நிலையில், தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், மீன்வளத்துறை அமைச்சருமான ஸ்ரீநாத் எங்கே இருக்கிறார்? மக்களின் அடிப்படை பிரச்னையை தீர்க்க இதுவரை என்ன நடவடிக்கை எடுத்துள்ளார்? என தூத்துக்குடி தெற்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சியின் மாவட்டபொதுச்செயலாளர்A.M.ராஜேஷ்சரமாரியாக கேள்வி எழுப்பியுள்ளார்.

தூத்துக்குடி மாநகருக்கு குடிநீர்வழங்கும்பகுதியில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாக குடிநீர் வரத்து பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மாநகரின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். குடிநீர் கிடைக்காமல் மக்கள் தவிக்கும் சூழலில், மாநகராட்சி ஆணையர் மற்றும் அதிகாரிகள் பிரச்னையை சமாளிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால், தொகுதி மக்களின் பிரதிநிதியாகவும் அமைச்சராகவும் இருக்கும் ஸ்ரீநாத் இதுவரை என்ன நடவடிக்கை எடுத்தார் என்பது புரியாத புதிராக உள்ளது என A.M. ராஜேஷ் தெரிவித்துள்ளார்.

குடிநீர் தட்டுப்பாடு குறித்து மாநகராட்சி அதிகாரிகளை அழைத்து அமைச்சர் அவசர ஆலோசனைக் கூட்டம் நடத்தினாரா? குடிநீர் வரத்து பாதிப்புக்கான காரணத்தை நேரில் ஆய்வு செய்தாரா? மாற்று குடிநீர் ஏற்பாடுகளை செய்ய உத்தரவிட்டாரா? பொதுமக்கள் பாதிக்கப்படாமல் இருக்க மாநகராட்சி நிர்வாகத்துடன்இணைந்துசெயல்திட்டம்வகுத்தாரா? என்பதற்கு அமைச்சர் பதில் அளிக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதிகாரிகளை ஒருங்கிணைத்து பிரச்னைக்கு உடனடி தீர்வு காண வேண்டிய அமைச்சர் மவுனமாக இருப்பது ஏன்? என பா.ஜ.க. கேள்வி எழுப்பியுள்ளது.

மேலும்,தூத்துக்குடி மக்களின் குடிநீர்பிரச்னையை அரசியல் அறிக்கைகளுக்குள் முடித்துவிடாமல், அமைச்சர் உடனடியாக களத்தில் இறங்க வேண்டும். மாநகராட்சி ஆணையர், குடிநீர் வழங்கல் துறை அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து துறை அதிகாரிகளையும்அழைத்துஅவசரக்கூட்டம்நடத்தி, குடிநீர் விநியோகத்தை முழுமையாக சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என A.M. ராஜேஷ் வலியுறுத்தியுள்ளார்.

தூத்துக்குடியில் மக்கள் தண்ணீருக்காக தவிக்கும் போது அமைச்சர் மவுனமாக இருக்க முடியாது. பதவி என்பது அதிகாரத்தை அனுபவிப்பதற்காக அல்ல; மக்களின் பிரச்னையை தீர்ப்பதற்காக. தூத்துக்குடி மக்களின் குடிநீர் பிரச்னைக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும்" என A.M. ராஜேஷ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# நல்லூரில் போதை இல்லா தமிழகம் விழிப்புணர்வு பேரணி





கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்த நல்லூரில், கண்டப்பன்குறிச்சி ஸ்ரீ பவானி கல்வி நிறுவனங்கள் சார்பில் போதை இல்லா தமிழகம் விழிப்புணர்வு பேரணி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. பேரணியில் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ, மாணவிகள் திரளாக கலந்து கொண்டு போதைப் பொருட்களுக்குஎதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

பேரணியை நல்லூர் அரசு மருத்துவர் டாக்டர் தமிழரசன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். தொடர்ந்து மாணவ, மாணவிகள் ஊர்வலமாகச் சென்று, போதைப் பொருட்களை ஒழிப்பது, போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு வாசகங்களை முழக்கமிட்டனர்.

பேரணியில் ஸ்ரீ பவானி கல்வி நிறுவனங்களின் தாளாளர் நாராயணன், செயலாளர் மகாலட்சுமி நாராயணன், நிர்வாக அலுவலர் பொன். சடையமுத்து, உடற்கல்வியியல் கல்லூரி முதல்வர் சிதம்பரராஜா,கலைமற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் பாலமுருகன், கல்வியியல் கல்லூரி முதல்வர் கல்லூரி முதல்வர் செந்தில் மற்றும் பேராசிரியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

போதைப் பொருட்களுக்கு எதிராக இளைஞர்கள் மற்றும் மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற இப்பேரணியில், பொதுமக்களும் போதை இல்லா தமிழகத்தை உருவாக்க ஒத்துழைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.




# மக்களின் தேவைகளை அறிந்து, மக்களுடன் இணைந்து மக்களுக்காக செயல்படுவது என்பது நல்ல நிர்வாகத்தின் அடிப்படை

## மாவட்ட வருவாய் அலுவலர் மா.வீராசாமி பேச்சு



தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், குருக்கள்பட்டி ஊராட்சிஏ.ஆர்.பிமஹாலில் இன்று 12.8.2026 நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.மா.வீராசாமி அவர்கள் 68 பயனாளிகளுக்கு ரூபாய் 7.40 இலட்சம் மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் திரு.மா.வீராசாமி அவர்கள் தெரிவித்ததாவது: நடைபெறும் இந்த மக்கள் தொடர்பு முகாம் மூலம் பொது மக்களின் குறைகள்,கோரிக்கைகள் மற்றும் தேவைகளை நேரடியாகக் கேட்டறிந்து, அவற்றிற்கு உரிய தீர்வு வழங்குவதற்கான ஒரு சிறந்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அரசின் நலத்திட்டங்கள் அனைத்தும் தகுதியான பொதுமக்களுக்கு முழுமையாக சென்றடைவதே நமது முக்கிய நோக்கமாகும்.கல்வி,சுகாதாரம், குடிநீர், சாலை வசதி, மின்சாரம், வீட்டுவசதி, முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலன், விவசாயம்,மகளிர்நலன் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சேவைகள் குறித்து பொதுமக்களுக்கு தேவையான வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகின்றன. "மக்களின் தேவைகளை அறிந்து, மக்களுடன் இணைந்து, மக்களுக்காக செயல்படுவது" என்பதே நல்ல நிர்வாகத்தின் அடிப்படை.

இந்தமக்கள்தொடர்பு முகாமை சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள அனைத்து துறைஅலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுமக்கள் அனைவரும் அரசு வழங்கும் நலத்திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு, மாவட்டத்தின் வளர்ச்சிக்கு முழுமை யான ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் திரு.மா.வீராசாமி அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக மக்கள் தொடர்பு முகாம் நடைபெற்ற திருமண மண்டப வளாகத்தில் பல்வேறு அரசு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்தால் திட்ட விளக்க கண்காட்சி அரங்குகளை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.மா.வீராசாமி அவர்கள் பார்வையிட்டார்.

இம்முகாமில் சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் திருமதி ஆ.அனிதா, தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்புத் திட்டம் திரு.பெ. ராஜேந்திரன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு. செல்லத்துரை, மாவட்ட சமூக நல அலுவலர் செல்வி மதிவதனா, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.கோவிந்தன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.மகிழ்நன், உதவி ஆணையர் கலால் திரு.ப. சுப்பிரமணியன், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் உடன் இருந்தனர்.



ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், இச்சிப்பாளையம் கிராம நிர்வாக அலுவலகம் அருகில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி மகளிர்சுய உதவிக்குழுவிற்கு கடனுதவியினை நேற்று (12.08.2026) வழங்கினார். உடன் ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் முத்துசாமி அவர்கள் உட்பட பலர் உள்ளனர்.



## ஈரோடு தாளவாடி, தலைமலை, தொட்டபுரம் ஆஞ்சநேயர் கோவில் சார்பாக

# ஈரோடு நேதாஜி காய்கறி மார்க்கெட்டில் 20வது மாதமாக ஆடி அமாவாசையை முன்னிட்டு அன்னதானம்

ஈரோடு தாளவாடி தலைமலை தொட்டபுரம் ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயர் திருக்கோவில் சேவா அறக்கட்டளை மற்றும் ஈரோடு தினசரி காய்கறி சந்தை நண்பர்கள் இணைந்து, கடந்த இரண்டு வருடமாக தங்களது சேவையைத் தொடர்ந்துள்ளனர். ஈரோடு நேதாஜி காய்கறி சந்தையில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டில், 20-வது மாதமாக ஆடி அமாவாசையை முன்னிட்டு மாபெரும் அன்னதானம் நடைபெற்றது. ஆஞ்சநேயர் படத்திற்கு சிறப்புஅலங்காரம்செய்யப்பட்டுபூஜைகள் நடைபெற்றபின்புசிறப்புபிரம்மாண்ட அன்னதானம் தொடங்கப்பட்டது. குறிப்பாக ஆடி அமாவாசையை முன்னிட்டு மிளகு சாதம் , எலுமிச்சை பழ சாதம், தக்காளி சாதம், காய்கறி சாதம் போன்ற நான்கு வகையான சாதங்கள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்விற்கு சிறப்பு அழைப்பாளர்களாக அம்மன் கேலண்டரிங் மில் சுப்பிரமணியம், பூபதி ஆயில் மில் உரிமையாளர் S. A.ஆறுமுகம் ஆகியோர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு அன்னதானத்தை துவக்கி வைத்தனர். நேதாஜி காய்கறி மார்க்கெட் கடை உரிமையாளர்கள், விவசாயிகள், கோவில் அறங்காவலர்கள்,அன்னதான கமிட்டியின்நிர்வாகிகள், மகளிர் அணியினர் கலந்துகொண்டு 2000-க்கும் மேற்பட்ட குழந்தைகள், பெரியவர்கள், முதியோர்களுக்கு உணவை வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து, ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயர் திருக்கோவில் சார்பாக ஈரோடு கொங்கலம்மன் கோவில் வீதியிலும்சுமார்700பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.மேலும்தலமலை ஆஞ்சநேயர் திருக்கோவிலிலும் அறக்கட்டளை சார்பாக அன்னதானம் வழங்கப்பட்டது.

## ஈரோடு மாவட்டத்தில் கனரா வங்கியின் சார்பில் "கனரா வித்யா ஜோதி" திட்டத்தின் மூலம்

# 312 மாணவியர்களுக்கு ரூ.12.48 இலட்சம் மதிப்பிலான கல்வி உதவித்தொகைக்கான ஆணையினை மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் வழங்கினார்

ஈரோடு மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், கனரா வங்கியின் சார்பில் "கனரா வித்யா ஜோதி" திட்டத்தின் மூலம் 312 மாணவியர்களுக்கு ரூ.12.48 இலட்சம் வகுப்பு வரை உள்ள மாணவியர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களின் கல்வியை ஊக்குவிக்கும்வகையில்"கனரா வித்யா ஜோதி" கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. ரூ.12.48 இலட்சம் மதிப்பிலான கல்வி உதவித்தொகைக்கான ஆணை மற்றும் சான்றிதழ்களை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வில் போது,



மதிப்பிலான கல்வி உதவித்தொகைக்கான ஆணையினை மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் நேற்று (12.08.2026) மாணவியர்களுக்கு வழங்கினார்.

ஈரோடு மாவட்டத்தில் கனரா வங்கியின் 52 கிளைகள் செயல்பட்டு வருகின்றன. இக்கிளைகளின் மூலம் 52 அரசுப் பள்ளிகளில் பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த 5-ம் வகுப்பு முதல் 10-ம்

அதன்படி, 5-ம் வகுப்பு முதல் 7-ம் வகுப்பு வரை பயிலும் மாணவியர்களுக்கு தலா ரூ.3,000/- வீதமும், 8-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை பயிலும் மாணவியர்களுக்கு தலா ரூ.5,000/- வீதமும் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டத்தில் உள்ள 52 அரசுப் பள்ளிகளில் பயிலும் மொத்தம் 312 மாணவியர்களுக்கு

உதவி மாவட்ட கல்வி அலுவலர்அமுதா,கனரா வங்கியின் ஈரோடு மண்டல துணை பொது மேலாளர் சரவணன், நபார்டு வங்கியின் உதவி பொதுமேலாளர்அசோக் குமார், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் விவேகானந்த், வங்கி கிளை மேலாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா மகளிர் கல்லூரியில் 32வது பட்டமளிப்பு விழா நிகழ்ச்சி



கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள, ஸ்ரீ ராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் 32ஆவது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. கே.பி.எம்.ஜி இந்தியா நிறுவனத்தின் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுச் சேவைப் பிரிவின் தேசியத்தலைவர் நாராயணன் ராமசாமி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். முன்னதாக மாணவிகள் மத்தியில் அவர் கூறியதாவது. மாணவிகள் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப புதிய திறன்களைத் தொடர்ந்து கற்றுக்கொண்டு, மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையுடன் செயல்பட வேண்டும். தன்னம்பிக்கை, கடின உழைப்பு மற்றும் நேர்மை ஆகியவற்றை வாழ்க்கையின் அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் சிறந்த சாதனைகளை படைக்கவேண்டும் என்று கூறினார். எஸ்.என்.ஆர் சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் முனைவர் சுந்தர் ராமகிருஷ்ணன் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிப் பேசும்போது, கல்வி என்பது நமக்கு மட்டுமல்லாமல் பிறருக்கும் பயன் தருவது தொடர் உழைப்பின் பலனாகப் பட்டம் பெறும் மாணவிகள், தங்களுடைய திறமைகளைத் தனக்கும் தான் வாழும் சமூகத்திற்கும் உதவக்கூடியதாகப் பயன்படுத்த வேண்டும் என்று கூறிய அவர், மாணவிகளின் வாழ்க்கையில் வெற்றிகளையும் பலவித முன்னேற்றங்களையும் பெற வாழ்த்தினார். கல்லூரியின் முதல்வர் முனைவர் கி.சித்ரா கல்லூரி மற்றும் மாணவிகளின் சாதனைகளையும் பல்கலைக்கழக அளவில் அவர்கள் பெற்ற சிறப்புகளையும் குறிப்பிட்டுப் பட்டம் பெற்ற அனைவரையும் பாராட்டிப் பேசினார். 4 தங்கப்பதக்கங்கள் உட்பட பல்கலைக்கழக அளவில் 12 சிறப்பிடங்களைக் கல்லூரி மாணவிகள் பெற்றுள்ளதோடு, இளநிலை மற்றும் முதுநிலைப் பிரிவுகளில் 634 பேர் பட்டம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.நிகழ்ச்சியில் எஸ்.என்.ஆர் சன்ஸ் அறக்கட்டளையின் முதன்மைசெயல் அலுவலரும் கல்லூரியின் செயலருமான சி.வி.ராம்குமார் மற்றும் எஸ்.என்.ஆர் சன்ஸ் அறக்கட்டளையின் தலைமை நிர்வாக அதிகாரி டி.மகேஷ்குமார் ஆகியோர்கலந்துகொண்டனர்.

# 20 நாட்களுக்கு மேலாக குடிதண்ணீர் வராததால் கவுன்சிலருடன் சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள்



தேனி அருகே அல்லிநர்கரம் பகவதி அம்மன் கோயில் அருகே 5 வது வார்டு பகுதியில் ஏராளமான குடும்பங்கள் வசித்து வருகின்றனர், இந்தப் பகுதிக்கு கடந்த 20 நாட்களுக்கு மேலாக குடி தண்ணீர் வராததால் பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்

மாதத்திற்கு முன்பு இரண்டு நாளுக்கு ஒருமுறை தண்ணீர் வந்து கொண்டிருந்த நிலையில் தற்போது நான்கு நாட்களுக்கு ஒரு முறை மட்டும் தண்ணீர் வருவதாகவும் அதுவும் முறையாக வருவதில்லை என புகார் தெரிவிக்கின்றனர்

முறையாக வரி செலுத்தியும் தங்கள் பகுதிக்கு தண்ணீர் வருவதில்லை என்றும் இது குறித்து தேனி - அல்லிநகரம் நகராட்சி நிர்வாகத்திடம் பலமுறை புகார் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படாததால்

ஐந்தாவது வார்டு கவுன்சிலர்கிருஷ்ணபிரபாஐயப்பன் உடன் பொதுமக்கள் இணைந்து வீரப்பஅய்யனார் கோயில் செல்லும் சாலையில் காலி குடங்களுடன் அமர்ந்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்

இதனைஅடுத்துசம்பவ இடத்திற்குவருகைபோலீசார் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி அதிகாரிகளிடம் தெரிவித்து நடவடிக்கை எடுப்பதாக கூறியதை அடுத்து கலைந்து சென்றனர்



## ராதாபுரம் சட்டமன்ற தொகுதி கோரிக்கைகள்

# அமைச்சர் வன்னி அரசை சந்தித்து மனு அளித்த எம்.எல்.ஏ. டாக்டர் எஸ்.கே.கிறிஸ்டோபர்

இராதாபுரம்சட்டமன்றஉறுப்பினர்டாக்டர்எஸ்.கே. கிறிஸ்டோபர் சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகுசமூகநீதிதுறைஅமைச்சர்வன்னிஅரசை நேரில் சந்தித்து,

இராதாபுரம் தொகுதிக்குட்பட்ட மக்கள் கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை அளித்தார்

இதில் முக்கியத்துவம் வாய்ந்த மனுக்களாக காட்டுநாயக்கர்மக்களின்வகுப்புசான்றிதழ்பெறுவது சம்பந்தப்பட்டவை இருந்தது குறிப்பிடத்தக்கது. பொதுமக்களின் தேவைகளை கருத்தில் கொண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள இம்மனுக்கள் மீது கூடிய விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மாண்புமிகு சமூக நீதித் துறை அமைச்சர் வன்னி அரசு உறுதியளித்துள்ளார்.

# Lok Sabha probe panel finds Justice Yashwant Varma guilty in cashathome case



*The three-member inquiry committee probing allegations against Allahabad High Court judge justice Yashwant Varma has found all three articles of charge against him proved, holding that his explanation regarding the discovery of a large quantity of unaccounted currency at his official residence was "evasive" and "misleading".*

*The report, tabled in both Houses of Parliament on Wednesday, stopped short of holding that the currency belonged to justice Varma for want of substantial evidence establishing personal ownership. But it rejected his defence that he had no knowledge of the cash or responsibility for what happened to it after it was discovered following a fire at his official residence in Delhi on March 14, 2025.*

*Also Read | Can Parliament act against a judge who has already resigned? Constitutional puzzle in ex-judge Varma's case*

*"The cumulative record therefore establishes the presence of substantial currency notes within the official premises, failure to satisfactorily explain its presence, failure to preserve the material, later non-availability of the currency notes, and absence of any substantiated defence capable of displacing the evidence led before the Committee," the 126-page report said.*

*The committee comprised Supreme Court judge justice Aravind Kumar, then Bombay high court chief justice Shrikrishna Chandrashekhar, who has since been elevated to the Supreme Court, and senior advocate BV Acharya.*

*The panel rejected justice Varma's contention that the storeroom where the cash was found was beyond his control. It noted evidence concerning a locked cabinet containing his personal articles in the room and held that the circumstances established a sufficient connection between the judge and the premises. The first article of charge was consequently held proved.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.